Registered No. M. 1014.

உ

ஸ்ரீ வாணிசகாயம்.

# கலைமகள்.

புதுவைக் கலைமகள் சமுகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல்.
வீடுபெறநில்.

| | | |
|---|---|---|
| வெண்டாமரை உ. | 1914-ம் ஆண்டு ஜனவரி மீ | இதழ் க. |



பத்திராதிபர் :— சி. பங்காருப் பத்தர்,
கல்வே காலேஜ் தமிழ்ப் பண்டிதர்
புதுவை.

| | |
|---|---|
| வருஷ சந்தா ரூ 1 | வெளிநாட்டுக்கு ரூ 2 |
| தபாற்கூலி அணா 4 | தனி சஞ்சிகை அணா 2 |

புதுவை — சைகோன் சின்னையா பிரஸ்.

308

## உள்ளுறை.


| | பக்கம் |
|---|---|
| கலைமகள் : — பத்திராதிபர். ... ... ... ... | 1 |
| வேலூர் சைவசித்தாந்த மகா சமாஜத்தின் 8-வது வருடக் கூட்டம் : — ஸ்ரீமான் தி. வடிவேலுமுதலியார், கம்பர்கலாமிர்த சங்கம், திருவெண்ணெய்நல்லூர். ... | 3 |
| ரமணி : — ஸ்ரீமான் சு. அ. சுப்பராயப்பிள்ளை, புதுவை. ... | 6 |
| புதுவருட வாழ்த்து : — ஸ்ரீமான் வ. விநாயகர்தம்பிபத்தர், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் ... ... ... | 9 |
| கருப்பத் தம்பிரான் : — ஸ்ரீமான் ஆர். பார்த்தசாரதி அய்யங்கார், உபாத்தியாயர், முத்தியாலுப்பேட்டை. ... | 10 |
| சீவக சிந்தாமணியும் அதன் வரலாறும் : — பத்திராதிபர். | 12 |
| தொல்காப்பியம் : — இலக்கணக்குட்டி. ... ... ... | 15 |
| மங்கலம் : — வேதாந்தபாஸ்கரர் கோயிலூர் ஸ்ரீமத் வீர - சுப்பைய சுவாமிகள். ... ... ... ... | 16 |
| நியாயமாலா :— ஸ்ரீமத் அநந்தபத்மநாப ஸ்வாமிகள், காஞ்சீபுரம். ... ... ... ... ... ... | 18 |
| சுகுணமஞ்சரி : — இதோபதேசி. ... ... ... | 19 |
| வைத்தியக் குறிப்பு : — ஸ்ரீமான் V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார், Ex. முனிசிப்பல் கௌன்சிலர், பழநிஸ்தலம். ... ... ... ... ... | 21 |
| சமாசாரம். ... ... ... ... ... ... | 22 |
| இலக்ஷணாவலி. ... ... ... ... ... ... | 1 |


## சந்தாநேயர்களுக்கு அறிவிப்பு.

சென்ற மாதத்தோடு சந்தாத்தொகை முடிவாகப்பெற்ற சந்தாநேயர்கள் தயைசெய்து இவ் வருடத்துத் தங்கள் சந்தாத் தொகையை உடனே அனுப்பிவிடுமாறு பிரார்த்திக்கப்படுகின்றார்கள்.

சந்தாத்தொகையை அனுப்பாத நேயர்களுக்கு அடுத்த மாதத்துச் சஞ்சிகை வி. பி. மூலமாய் அனுப்பப்படும். வழக்கம் போல் அதை அங்கீகரித்துக் கலைமகளை ஆதரிக்கக் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

பத்திரிகை வேண்டாத நேயர்கள் வீண் செலவிற்கும் கஷ்டத்திற்கும் நம்மை உட்படுத்தாமல் முன்னதாகவே தெரிவித்து விட்டால் அதையே ஓர் பேருபகாரமாகக் கொள்ளுவோம்.

கலைமகள் ஆபீஸ்,
புதுவை.

பத்திராதிபர்.

உ

ஸ்ரீவாணீசகாயம்.

# கலைமகள்.

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும் வெளிவரும்
மாதாந்தப் பத்திரிகை.

வித்தைவிரும்பு. கேள்விமுயல். வீடுபேறுநில்.

வெண்டாமரை ௨. ] 1914-ம் ஆூ ஜனவரி மீ [ இதழ் க.

## இலௌகிகப் பகுதி.

---

### வேதாந்தபாஸ்கரர் கோயிலூர் ஸ்ரீமத் வீர. சுப்பைய சுவாமிகள் அருளிய கலைமகள் வாழ்த்துப்பா.

---

அலைமகண்மகிழ்நன்மலைமகண்மகிழ்ந னருள்பெறவேண்டினேனனுங்
கலைமகளருளினல்லது துதியாற் கைப்படாதாதலினமது
கலைமகள்சருவகாலமும்வாழ்க ! கலைமகள்பெறுமறிஞர்களே
கலைமகளிறையாம்பத்தருக்குதவின் கலைமகள்வாழுநீடூழி.

---

### கலைமகள்.

---

புதுவைக் கலைமகள் கழகத்தினின்றும், ஆன்றோர் அநுக்கிரக விசேடத்தால், 1913-ம் ஆூ ஜனவரி மாதத்தில், "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற தெய்வப் புலவர் திருவாக்கின்படி புகழொடு தோன்றிய நம் கலைமகள், கருணைக் காளமேகமாய் வீறுகொண்டு விளங்கும் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ ஞானியார் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள், வேதாந்த பாஸ்கரர் கோயிலூர் ஸ்ரீமத் வீர-சுப்பைய

சுவாமிகள் முதலிய பெரியோர்களும், தமிழ் ஆங்கிலம் பிராஞ்சு பாஷையிற் சிறந்து விளங்கும் வித்துவான்களும் விஷயதானம் செய்யும் பெரும்பேற்றைப் பெற்று, கல்வி, அறிவு, ஒழுக்கம், இலக்கியம், இலக்கணம், தருக்கம், பத்தி, ஞானம் முதலிய அரிய பெரிய விஷயங்களாகிய அணி பல புனைந்து, அன்போடு தம் காத்திலேந்தும் அறிஞர் பலர்க்கும் உவகைப் பேரமிழ்தூட்டி, இத்தென்னாடு முழுவதும் திகழ்ந்து விளையாட்டயர்வது அன்பர் பலரும் அறிந்த விஷயமே.

நம் கலைமகள், முயற்சிக் குறைவு, ஆதரவுக் குறைவு முதலியவெனும் பக்ஷி தோஷம், மாந்தம் முதலிய குழந்தை நோய்கள் எவற்றானும் பீடிக்கப்படாமல், கடவுள் கருணையானும், ஆன்றோர் அநுக்கிரகத்தானும், சந்தாநேயர் சகாயத்தானும், மற்றும் பல ஆப்தர் உதவியானும், நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, தனது முதலாவது வருடப் பூர்த்தியை யடைந்தனள். கலைமகள் அங்ஙனம் வளர்ந்தாளென்பதற்கு, தனது உருவிற் சற்றுப் பருத்திருப்பதே சான்றாமென்க.

1914-ம் ஆண்டு ஜனவரி முதல் நமது செல்வக் கலைமகளுக்கு இரண்டாவது வருடம் ஆரம்பமாகின்றது.

இவ்விரண்டாவது வருட முதல் பிரதி மாதமும் கலைமகள் பத்திரிகையின் முதலில், குற்றங்குறைந்த பெரியோர்கள், கற்றுத் தேர்ந்த புலவர்கள், மற்றும் பலவிதத்தினும் உலகிற் பிரசித்தி பெற்ற புருடர்கள் பெண்மணிகள் இவர்களுடைய திருவுருவச் சித்திரப்படங்களும், அவர்களது உண்மையான ஜீவியகால சரித்திரங்களும் காணப்பட்டு, காண்பவருள்ளம் களிதூங்கச் செய்ய வேண்டுமெனக் கருதினேன். ஆனால் அதுபற்றி நேரிடும் அதிக பொருட்செலவும் அளவுகடந்த சிரமமும் சற்றுப் பொறுவென்றெனக்குப் போதித்தனவாதலின், இவ்வருடம் அத்துறையிலிறங்கினேனில்லை. நிற்க,

தனது இரண்டாம் வயதிற் புகும் நம் கலைமகள், இவ்வயதினும் இடையூறு சிறிதுமின்றிச் செவ்வனே வளர்ச்சிபெறச்

செய்வது, சந்தாநேயர்களையும் மற்றவர்களையும் பொறுத்த கடமையாகும்.

அன்றியும், வயது ஏற ஏற வளர்ச்சியு மிகுமாதலின், கலைமகளின் போஷிப்பும் பெருகவேண்டுமென்றோ? போஷிப்பின் பெருக்கால் புஷ்டியாகுதல் காசினியதனிற் கண்கூடன்றோ?

ஆதலின், பத்திரிகைப் பயனைப் பாங்குடனறிந்த சந்தாநேயர்கள் ஒவ்வொருவரும், தங்கள் சந்தாவை முன்போல் முற்பணமாக உதவிக் கலைமகள் தன்னைக் கவின்பெற வளர்ப்பதுமன்றி, கலைமகள் வளர்ச்சியைக் கருதி, தங்களால் கூடியவரையில் புதிதாகச் சந்தாநேயர்களைச் சேர்த்துத் தந்து ஆதரிக்குமாறும் பெரிதும் வேண்டுகின்றனம். "வேதக்காட்சிக்கு முபநிடத் துச்சியில் விரித்த போதக்காட்சிக்கும் காணலன் புதியரிற் புதியன் மூதக்கார்க்கு மூதக்கவன் முடிவிற்கு முடிவா யாதிக்காதியா யுயிர்க்குயிராய் நின்ற வமலன்" அருள்சுரக்க.

பத்திராதிபர்.

---

## வேலூர் சைவசித்தாந்த மகா சமாஜத்தின் 8-வது வருடக் கூட்டம்.

எல்லாம் வல்ல இறைவன் திருவருளாற் றோன்றி, சைவசமயிகள் பலரும் உய்யுமாறு, சென்ற சில வாண்டுகளாக நடைபெற்றுவரும் சென்னைச் சைவசித்தாந்த மகா சமாஜத்தின் எட்டாவது வருட மகாஜனக் கூட்டமானது, சென்ற 1913-ம் ஞு டிசம்பர் மீ 26, 27, 28-ம் உகளில் திருக்கோவலூர் ஆதீனம் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் ஞானியார் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளின் அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ், வேலூர் தியேடிரிகல் ஹாலில் கூடி நடைபெற்றது. அதற்கு எண்ணிறந்த கல்வி யறிவாளர்களும் உள்ளூர் வெளியூர் தனவான்களும் பல அன்பர்களும் விஜயஞ்செய்திருந்தனர். அறிக்கைப் பத்திரத்தில் கண்டவண்ணம் முதல் தினமாகிய 26 – 12 – 13-ல் சுவாமிகள் சபாநாயகராக வீற்றிருக்க, திருமுறைப் பாராயணம், உபசாரணைச் சங்கத்தார் வரவேற்புப் பத்திரம் வாசித்தல், நிர்வாக சங்கத்தார் வந்தனோபசாரப் பத்திரம் வாசித்தல், சமாஜ அறிக்கைப் பத்திரம் வாசித்

தல் முதலியன நடைபெற்றபின், சுவாமிகள் முன்னுரையாக "சைவ சித்தாந்தம்" என்பதைப்பற்றி அமுதினுமினிய மொழிகளால், கேட்போர் பலர்க்கும் செவியுணவளித்து ஆனந்தத்தி லமிழ்த்துவிட்டனர். பிறகு தூத்துக்குடி ஸ்ரீமான் பொ. முத்தையபிள்ளை யவர்களால் "சிவலிங்க தத்துவார்த்தம்" என்பதும், குழித்தலை பிரம்மஸ்ரீ A. அரங்கசாமி ஐயரவர்களால் "சைவமும் ஏனைய சமயங்களும்" என்பதும், புதுவை ஸ்ரீமான் பங்காருபத்தர் அவர்களால் "குருபக்தி" என்பதும், செங்கற்பட்டு ஸ்ரீமான் பொன்மார் நடேச முதலியார் அவர்களால் 'அன்பு' என்பதும், கொழும்பு ஸ்ரீமான் முதலியார் சபாரத்தினம் அவர்களால் ஆங்கிலத்தில் 'கன்மம்' என்பதும் உபந்நியாசிக்கப்பட்டன. பின்னர், சுவாமிகள் ஒவ்வொரு விஷயத்தையும் மிக்க தெளிவாக விளக்கி முடிவுரை கூறினர்கள்.

மறுநாளாகிய 27–12–13-ல் திருமுறைப் பாராயணம் நடைபெற்றபின் சேலம் ஸ்ரீமான் ஹர. ஷண்முக முதலியா ரவர்களால் "சிவ, சிவ, சிவ, சிவ" என்பதும், திருநெல்வேலி ஸ்ரீமான் பால்வண்ண முதலியார் அவர்களால் "இருவினையொப்பு" என்பதும்; முருகேசநகர் ஸ்ரீமான் அ. முத்தைய முதலியார் அவர்களால் 'புருடார்த்தம்' என்பதும், சகின்ட்ராபாட் ஸ்ரீமதி ஆண்டாளம்மாள் அவர்களால் "ஆன்ம லக்ஷணம்" என்பதும், ஆனூர் ஸ்ரீமான் சிங்காரவேல் முதலியாரவர்களால் "சிவனே தெய்வம்" என்பதும், திருக்கோவலூர் ஸ்ரீமான் ம. ரா. குமாரசாமிப்பிள்ளை யவர்களால் 'தவம்' என்பதும், திருவோத்தூர் சைவஸ்ரீ பானுகவி சுவாமிகளால் "ஸ்ரீ ஹரதத்தாசாரிய சுவாமிகள் அருளிச்செய்த ஸ்லோக பஞ்சக சிந்தனை" என்பதும், வாலாஜா நகர் ஸ்ரீமான் அ. கமலநாத முதலியா ரவர்களால் "சிவத்தைப்பேணில் தவத்திற்கழகு" என்பதும், சித்தூர் ஸ்ரீமான் அரங்கசாமிப்பிள்ளை யவர்களால் "மகேசுவரபூஜை" என்பதும், வேலூர் ஸ்ரீமத் முத்து இராமலிங்க சுவாமிகள் அவர்களால் 'சம்பந்தர்' என்பதும், தூத்துக்குடி ஸ்ரீமான் பொ. முத்தையபிள்ளை யவர்களால் "சைவசித்தாந்த மகா சமாஜத்தால் விளைந்த பயனும் விளையப்போம் பயனும்" என்பதும், திருக்கோவலூர் ஸ்ரீமான் சொக்கலிங்க உடையார் அவர்களால் 'அருள்' என்பதும் உபந்நியாசிக்கப்பட்டன. சுவாமிகள் இறுதியில் அருமையாக முடிவுரை கூறினர்கள்.

மூன்றாவது தினமாகிய 28–12–13-ல் காலையில் புகைப்படமும், அங்கத்தவர் கூட்டமும் நடைபெற்றபின், சபை கூடித் திருமுறைப்பாராயணம் நடைபெற்றது. பின்னர் மணிமங்கலம் ஸ்ரீமான் திருநாவுக்கரசு முதலியா ரவர்களால் "திருவள்ளுவர் சமயம்" என்பதும், சென்னை

ஸ்ரீமான் சச்சிதானந்தம்பிள்ளை B. A. அவர்களால் ஆங்கிலத்தில் "An appeal to educated Hindus" என்பதும், பெங்களூர் ஸ்ரீமான் V. S. ஆறுமுக முதலியா ரவர்களால் "நால்வர் மகிமையும், தேவார பாராயணமும்" என்பதும், தஞ்சாவூர் ஸ்ரீமான் S. V. M. நாராயணசாமி செட்டியார் அவர்களால் 'தெய்வாராதனை' என்பதும், வேலூர் ஸ்ரீமான் P. இராஜவேலு முதலியார் B. A. அவர்களால் 'ஜீவகாருண்யம்' என்பதும், சென்னை ஸ்ரீமான் கி. குப்புசாமி முதலியா ரவர்களால் "சைவசித்தாந்த சமாஜம்" என்பதும், சகின்ட்ராபாட் ஸ்ரீமதி ஆண்டாளம்மாள் அவர்களால் "ஆன்ம லக்ஷணம்" (தொடர்ச்சி) என்பதும், பெங்களூர் ஸ்ரீமான் கஜராஜ முதலியா ரவர்களால் 'பக்தி' என்பதும், ஈரோடு ஸ்ரீமான் அர்த்தநாரியாசாரி அவர்களால் 'சங்கானுபவம்' என்பதும், காஞ்சி ஸ்ரீமான் சோணாசல பாரதி யவர்களால் 'திருத்தொண்டு' என்பதும், சென்னை ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியா ரவர்களால் 'சிவஞானபோதம்' என்பதும், மதுரை ஸ்ரீமான் J. M. நல்லசாமிப்பிள்ளை B. A. B. L. அவர்களால் "பெரிய புராண உட்பொருள்" என்பதும், கொழும்பு ஸ்ரீமான் முதலியார் சபாரத்தினம் அவர்களால் "சமாஜக் கடமைகள்" என்பதும் உபந்நியாசிக்கப்பட்ட பின்னர், சுவாமிகள் ஒவ்வொரு விஷயத்தையும் குறித்து நீண்டதோர் பிரசங்கம் புரிந்தார்கள். அமுதினுமினிய அம்மொழியைக் கேட்ட பலரும் பிறவியினாலாய பயனைப் பெற்றார் என்பதிற் றடையில்லை. பின் பல வாழ்த்துப்பாடல்கள் கூறப்பட்டதும், சபாநாயக ரவர்கட்கும் மற்றவர்கட்கும் வந்தனோபசார மளிக்கப்பட்டுச் சபை கலைந்தது. நமது சைவசித்தாந்த சபையானது தோன்றிய இவ்வெட்டு வருடங்களில் சபாநாயக ஸ்தானம் வகிக்க நேர்ந்த பல பெரியோர்களில் நமது சுவாமிகள் போன்றவர்கள் நேர்ந்திராரென்றே கூறலாம். இச்சம்பவம் வேலூருக்கு முன்னில்லாத பெருமையை யுண்டாக்கிவிட்டது. இந்நிகழ்ச்சிக்குக் காரணபூதராய் நின்ற ஸ்ரீமான் P. இராஜவேலு முதலியார் B. A. அவர்கள் முதலிய வேலூர் அன்பர்களின் ஊக்கமும் உழைப்பும் யாவராலுங் கொண்டாடத்தக்கனவே. அடுத்த வருஷம் இச்சபை யாழ்ப்பாணத்தில் கூடப்போவதாக ஏற்பாடாகியிருக்கிறது. இறைவன் திருவருளால் இச்சபையும் அங்கத்தவர்களும் நீடூழி வாழ்ந்து சைவசமயம் தழைத்தோங்குவதாக. சுபம்! சுபம்!

தி. வடிவேலு முதலியார்

காரியதரிசி, கம்பர்கலாமிர்த சங்கம்

திருவெண்ணெய்நல்லூர்.

---

# ர ம ணி .

## ஓர் காதற் கதை.

### அத்தியாயம் 3.

( தொடர்ச்சி. )

ஜனார்த்தனன் செல்லாது நின்ருன். சாவித்திரியைப்பற்றி என்ன பேசுவதென் ருலோசித்துக்கொண்டு மனக்குழப்பத்துடன் சற்றுநேரம் மௌனமாயிருந்து, பின்பு "உன் நிச்சிதார்த்தத்தன்று உனக்கு ஜ்வரம் வந்ததாமே. இப்பொழுது உன் தேக சௌக்கியம் எப்படியிருக்கின்றது" எனச் சட்டெனத் தன் சிந்தையிற் ரோன்றியதைக் கூறினன்.

"அந்த ஜ்வரத்தை நானகவேதான் வருவித்துக்கொண்டேன்."

"எப்படி?"

"நிச்சிதார்த்தத்திற்கு முந்தின தினம் நான் கேட்டுக்கொண்டபடி அமிர்தம் ஆறுகாசுக்கு நாவற்பழம் வாங்கிக் கொடுத்தாள். ஆறுகாசு நாவற்பழத்தையும் தின்றுவிட்டு மண் கூஜாவிலிருந்து மூன்று டம்ளர் குளிர்ந்த ஜலம் சாப்பிட்டேன். இப்படிச் செய்தால் ஜ்வரம் வந்துவிடும். ஜ்வரம் வந்துவிட்டால் நிச்சிதார்த்தத்தை நிறுத்திவிடுவார்கள் என்று நினைத்தேன். ஆனல் ஜ்வரம் வந்துவிட்டது. நிச்சிதார்த்தம் மாத்திரம் நின்றுவிடவில்லை" என இதழ்பதைக்க இயம்பினள் இளங்கொடி. இந்த நாவற்பழ ரகஸ்யத்தைத் தன் உயிர்ச் சகோதரி ரமணிக்குங் கூருத சாவித்திரி இப்பொழுது ஜனார்த்தனனுக்குச் சொல்லிவிட்டாள். இதுதான் காதலினற் சித்தங்கலங்கிய கன்னிகைகளின் மதி.

"நமது நாட்டில் ஸ்திரீகள் கஸ்திப்படுவதற்காகவே பிறந்திருக்கிருர்கள்போலும்! உன்னுடைய தங்கபத்திரைச் சின்னம்மாள் பெண் ரவியைப்பார். அவள் ஐந்தாவது வயதில் அவளுக்கு அழகு கலியாணஞ் செய்து ஆருவது வயதில் அவள் தாலியை யறுத்துவிட்டார்கள். இப்பொழுது அவளுக்கு எட்டுவயதாயிற்று. இன்னும் அவள் தன் நிலைமையைச் சரியாய் அறிந்துகொள்ளவில்லை. இன்னுஞ் சில வருஷங்களுக்குப் பிறகு அவள் தன் பரிதாப ஸ்திதியைப்பற்றி எண்ணி ஏங்கியேங்கி எவ்வளவு துக்கப்படுவள்" என்றனன் ஜனார்த்தனன்.

"ரவி என்ன நிலைமையிலிருந்தபோதிலும் அவள் தன் வாழ்நாள் முழுவதும் பரிசுத்த கன்னிகையாயிருப்பாள். அந்தப் பாக்கியத்தை

மாத்திரம் நான் பெற்றுவிட்டால் எவ்வளவோ திருப்தியோடிருப்பேன். ஆனல் நான் முற்றும் வெறுக்கிற ஒரு கிழப் பூதத்தோடு நான் வாழும்படி விதித்திருக்கிருர்களே ஆகையினலல்லவோ நான் சாகவேண்டியதிருக்கிறது'' எனச் சோகத்தின் பெருக்கத்தினலும் காதலின் உருக்கத்தினலும் நாணந் தவிர்ந்து தலைநிமிர்ந்து ஜனர்த்தனன் முகத்தை உற்று நோக்கிப் பரிதாபகரமாகப் பிதற்றினள் பேதை.

"ஏனம்மா நீ இவ்வளவு யௌவனத்தில் சாவதைப்பற்றிப் பேசுகிருய்! அந்த ஒரு எண்ணத்தை மாத்திரம் மறந்துவிடு'' என அத்தியந்த அன்புநிறைந்த குரலிற் கூறினன் ஜனர்த்தனன்.

"இந்தப் பாழுங் கலியாணம் எப்படியேனும் நின்றுவிட்டால் தான் சாவித்திரி உயிரோடிருப்பாள். இல்லாவிட்டால் செத்துவிட்டாள். ஆனல் நாவற்பழத்தைத் தின்று ஜ்வரத்தை வருவித்துக்கொண்டது போல் அவள் தானே தனக்கு மரணத்தை வருவித்துக்கொள்வாளென்று எண்ணுதேயுங்கள். கலியாணத்திற்கு முன்னமே இயற்கையாகவே யாதேனுமொரு காரணத்தால் இறந்துவிடுவாள். இதுமாத்திரம் நிச்சயம். ஆகையால் உங்கள் ரமணியின் தோழி உயிரோடிருக்கவேண்டுமானல் நீங்கள்——'' என்றவாறு கம்பீரமாய்க் கழறின காரிகை திடீரெனப் பேசச் சக்தியற்றவளாய் முத்துமுத்தாகக் கண்ணீர்வடித்து ஓர் குழந்தையைப்போல் தேம்பித் தேம்பி யழலாயினள்.

இச்சோகக் காட்சியைக் கண்டான் ஜனர்த்தனன். பொங்கி உருகிப் பதைத்துக்கொண்டிருந்த அவனது உள்ளத்தில் உடனே தன் கைகளால் சாவித்திரியின் கண்களைத் துடைத்து அவளைத் தேற்ற வேண்டுமென்ற பேராவலுதித்தது. சாளரத்துக்கு மாத்திரம் கம்பிகளில்லாதிருந்தால் ஒருகால் அவ்வாவலை நிறைவேற்றியேயிருப்பான். ஆயினும் அவளது சஞ்சலத்தை அடியோடொழிக்கும் அமிர்தமொழிகளை அகபூர்வகமாகக் கூறலாயினன்.

"அழாதே சாவித்திரீ! நீ சாகவேண்டாம். என்னை முற்றும் நம்பியிரு. நீ விஜயரங்கதாசருகே விவாஹமணையி லிருந்தபோதிலும் அந்த க்ஷணத்திலும் நான் அந்த விவாஹத்தை நிறுத்திவிடுவேன். நீ உன் கலியாணதினம் வரையில் இந்த அறையிலேயே படுத்துக்கொள். நான் மற்ருெருமுறை உன்னைக் காணவேண்டிய தவசியமாயிருக்கலாம். அப்பொழுது நான் இரவு பத்தரை அல்லது பதினெருமணிக்கு இந்த ஜன்னலில் டக் டக் டக் என்று தட்டுவேன். இனி உன் துக்கத்தை ஒழித்துவிடு. படுக்கைக்குப்போ, நான் போய்வருகிறேன்'' எனச் சொல்லிவிட்டு

அகன்றுபோயினன். சாவித்திரியும் சாளரக் கதவுகளை அடைத்துவிட்டுத் தன் சயனத்திற்குச் சென்றாள்.

ஜனார்த்தனா! என்ன மகத்தான வாக்களித்துவிட்டாய்! ஆனால் சாவித்திரியின் துக்கத்தை ரமணி தன் வாயினால் உனக்குச் சொல்லியிருந்தால் நீ இவ்வாறு வாக்களித்திருப்பாயா. ஒருகாலு மளித்திராய். ஆகையினாற்றான் ரமணி அர்த்தராத்திரியில் தன் தோழியை உன் முன் அழைத்துக்கொண்டுபோய் அவள் வாயால் அவள் சஞ்சலத்தை உனக்குத்தெரிவிக்கவேண்டுமென் றெண்ணினள். சாவித்திரீ! "என் அத்தான் கவனத்தைக் கவர உன்னிடத்தில்தான் ஒரு வஸ்ய சக்தி யிருக்கிறது" என்று ரமணி சொன்னாளே. அது மெய்தான். அந்த வஸ்ய சக்தியினாற்றான் அவன் உன் முன் ஓர் அரிய சபதம் புகன்றுவிட்டான்.

இவ்வாறு நடந்தது நமது கதாநாயகி காணாமற்போன இரவிற்கு மறுதினம். அதற்கடுத்த மூன்று தினங்களாக ஜனார்த்தனன் ரமணியிருக்குமிடத்தை அறிந்துகொள்ள அநேக முயற்சிகள் புரிந்துகொண்டிருந்தான். அம் முயற்சிகளையெல்லாம் விவரித்தால் கதை அதிகமாக வளரும். நான்காம் நாள் சனிவாரத்தன்றிரவு சுமார் பத்தரை மணிக்கு யாரோ பங்கஜவல்லியம்மாளகத்து முற்புற வாயிற்கதவைத்தட்ட, ஜனார்த்தனன் கையிலொரு மெழுகுவர்த்தி விளக்குடன் கதவைத் திறந்தான். ஸந்யாசக் கோலங்கொண்ட ஒருவர் "ஜனார்த்தனர் என்பவர் யார்" என்றனர்.

"நான்தான். ஏன்?" என்றான் ஜனார்த்தனன்.

"இந்தக் கடிதத்தைப் பாருங்கள்" எனக் கூறி ஓர் கடிதத்தை ஜனார்த்தனன் கையிற் கொடுத்தார் ஸந்யாசி.

ஜனார்த்தனன் மெழுகுவர்த்தி விளக்கை அருகேயிருந்த ஓர் நாற்காலியின்மீது வைத்துக் கடிதத்தைப் பிரித்தான். முத்துக்கள்போன்ற அழகிய சிறு எழுத்துக்களைக் கண்டான். உடனே அவைகள் தன் அத்தை பெண் கையினால் எழுதிய எழுத்துக்கள் என்றறிந்துகொண்டான்.

(தொடரும்.)

சு. அ. சுப்பராயப்பிள்ளை.

317



யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை
ஸ்ரீமான் வ. விநாயகர்தம்பிபத்தர் அவர்கள்
கூறிய

## புதுவருட வாழ்த்து.

பல்லவி.

வாழ்கவாழ்க விஸ்வேசனருளால்
வையத்திற்புகழ்பெற்றுநீடூழி — வாழ்கவாழ்க.

அநுபல்லவி.

ஆழ்க தீயவெல்லாமரணமஞ்
சூழ்கவென்றன் பிற்சொல்லுந் தொண்டர்கள் — வாழ்க.

சரணங்கள்.

பதுமமேலயனுவில் வாழ்ந்திடும்
பாரதிதிருநாமங் கொண்டிந்தப்
புதுவைக்கலைமகள் கழகத்தினின்றுமே
பொற்புடன்வெளிவரு மிப்பத்திரம் — வாழ்க.

வண்டமிழாதிக் கலைகள் கற்றறி
வாளரேத்துங் கல்வே காலேஜ்தமிழ்ப்
பண்டிதப்பெரியோன் சி. பங்காருப்
பத்தராகுமிப் பத்திராதிபர் — வாழ்க.

எம்மனோர்களுநன்மை யெய்துமா
றிதம்புகட்டும்பற்பல வியாசங்கள்
தம்மறிவினால் வரைந்திப் பத்திரந்
தன்னில்வெளியிடுங் கல்வியாளர்கள் — வாழ்க.

வருடாவருடமும் வரையா திதன்சந்தா
வழங்கியெப்போது வரும்பத்ரமென்று
பிரியாவன்பதி னலெதிர்நோக்குநம்
பிரியநேயர்களாஞ் சந்தாதாரர் — வாழ்க.

தேயமன்னர்கள்போற்றும் பிராஞ்சுநற்
சீர்குடியர சாளுகைக்குள்ளே
யாயபுதுவைமா நகருமன்னதி
லமருஞ்சர்வசனங்களும் மற்றும் — வாழ்க.

2.

## * கருப்பத் தம்பிரான்.

( திண்டுக்கல் மாகாணத்தைச்சார்ந்த
கோட்டைக்காடு ஓடுக்கம். )

சாலிவாஹன சகாப்தம் 1653 கலி 4833 விரோதிகிருது வருஷம் வரைக்கும் மதுரையில் விஜயரங்க சொக்கநாத ராஜா அரசாட்சிசெய்து வந்தார். அவருக்குப் பிற்பாடு அவருடைய முக்கிய ராணியாகிய மீனுக்ஷி அரசாண்டாள். அவளுடைய ஆளுகைக்காலத்தில் திண்டுக்கல் மாகாணம் அவள் சகோதரரான வெங்கடப்பெருமாள் நாய்க்கர் விசாரணையிலிருந்தது.

அந்தக்காலத்தில், ஆடியனூத்து என்ற கிராமத்தில் அதன்குளத்திற்கு மேற்கில் காட்டுமிருகங்கள் மிகுதியாய் வசித்த ஓர் அடர்த்தியான காடு இருந்தது. அதன் மத்தியில் வேளாளத் திருமேனிக் கருப்பண்ணத் தம்பிரான் என்னும் பெயரிய ஒரு பரதேசி ஓர் ஆசிரமம் கட்டிக்கொண்டு அதில் வசித்துவந்தார். அவர் அங்கே இருந்தபொழுது மூன்று சித்தர்கள் அவரிடம்வந்து சில அந்தரங்க மந்திரங்களை அவருக் குபதேசித்து மறைந்தனர். சிறிதுகாலங் கடந்தபின், அப்பரதேசி திண்டுக்கல்லில் வசித்து வந்தபொழுது அந்தச் சித்தர்கள் மறுபடியும் அவரிடம்வந்து, கங்கைக்கு யாத்திரைபோகவும், அவருடைய பழைய அரணிய வாசஸ்தலத்திலேயே வசிக்கவும், வற்றாத அத்தியூற்றி னருகேயுள்ள அத்திமரத்தினடியில் தவம்புரியவும் சொல்லிப் போயினர். கருப்பண்ணன் சித்தர்களி னிவ் வுத்தரவைச் சிறிதும் பிசகின்றி நிறைவேற்றினர். அவர் காசி யாத்திரையைச் செய்து திரும்பிவந்து சித்தர்கள் குறித்தவிடத்தில் ஒரு தோட்டத்தை யுண்டுபண்ணி அங்கே ஓராசிரமத்தைக் கட்டித் தனிமையிலும் தபத்திலும் தந்நாளைக் கழித்துவந்தார்.

இது இப்படியாக, கொஞ்சகாலத்திற்குப் பின் மீனுக்ஷி ராணி இறக்கவும் அவளுடைய ராஜ்யம் மைசூருக்குக் கீழாகவும் ரகுநாத பண்டிதர் அரசாட்சி செய்யலானர். கருப்பண்ணன் ஸர்ப்பங்களுடன் விளையாடுவது வழக்கமென்றும் சித்தராதலின் தம் தெய்விக திருஷ்டியால் தொலைக் காட்சிகளைக் கண்டறிந்தாரென்றும் கேள்வியுற்று, பண்டிதர் அவரது மகிமையைப் பரீக்ஷிக்க அவாக்கொண்டு அவரிடமேகித் தம்மிடம் போஜன மருந்தவேண்டுமென்றும் பல்லக்கி லேறவேண்டுமென்றும் அவரைக் கேட்டுக்கொண்டார். சித்தர் தாம் அங்ஙனமேறின்

* ஆங்கிலத்தின் மொழிபெயர்ப்பு.

தம் பாரம் தாங்காது சிவிகைக்கணை முறியுமென் றுரைத்தார் எனினும் பண்டிதர் பிடிவாதத்தால் அவரேற உடனே அது முறிந்தது. பண்டிதர் பெரிதும் ஆச்சரியமுற்று அதைச் சீர்படுத்தித் தரவேண்டுமென்று கேட்கச் சித்தர் அதை முன்போலாக்கினர்.

இரகுநாத பண்டிதர் சித்தரைத் தம்மிருப்பிடமழைத்துச் சென்று அவரை மனப்பூர்வமாக வரவேற்று அவருக்குச் சம்பிரமமாக விருந்திட்டார்.

பிறகு அவர் சித்தருக்கு ஒரு வீடு கொடுத்து அவர் உள்ளே இருக்கும்பொழுது வெளியிலிருந்து கதவைப் பூட்டிவிட்டார். ஆனால் மறுநாட் காலை கதவு திறக்கப்பட்டபோது சித்தர் அங்கே காணப்படவில்லை; அவர் தம் வன ஆசிரமத்திலிருந்தார். இப்போது இரகுநாத பண்டிதர் கருப்பண்ணருடைய மகத்துவத்தை நன்றா யறிந்தார். அல்லாமலும் அவரைப் பரீக்ஷித்ததனா லுண்டான பாவத்தை நிவர்த்திசெய்ய 1000 ஜனங்களுக் கன்னமளித்து அப்புனிதருக்குச் செங்கல்லாலும் சுண்ணாம் பாலும் ஓர் சிற்றில் கட்டிக்கொடுத்தார். இன்னும் ஆடியனூர் கிராமத்தில் 54 குழி புன்செயும், 10 குழி நன்செயும், தொட்டணூரில் 12 குழி புன்செயும், தவசிமடையில் 50 குழியும், பெரியநாய்க்கன் குளத்திலும், எமகலாபுரத்திலும், அம்மயநாய்க்க னூரிலும் அதேவிதம் நிலங்களையும் அவருக்கு மான்யமாகக் கொடுத்தார். மேலும், இந்த விடங்களிலுள்ள ஜனங்களை அவருக்குப் பிரதி வருஷமும் ஒரு குருணி அரிசி கொடுக்கும் படியாகவும் கட்டளையிட்டார்.

சர்வஜித்து வருஷம் தை மாதம் ரதஸப்தமி தினத்தன்று கருப்பண்ணன் தேகவியோகமானார். அவர் மரணத்துக்குப் பிறகு அவருடைய சிஷ்யராகிய மதுரை மாகாணத்துச் சிறுமேனிப் பழனி சாமியார் அவருடைய ஸ்தானத்துக்கு வந்து, நடத்தவேண்டிய கிரியைகளை நடத்தி, அவருக்கு ஒரு சமாதி கட்டிவைத்துத் தினபூஜையைச் செய்துவந்தார். பழனி சாமியார் தம் (இறந்துபோன) குரு கடாக்ஷத்தாலும் விபூதியாலும் எல்லா வியாதிகளையும் சொஸ்தப்படுத்தும் சக்தியுள்ளவரா யிருந்தார். அவர் காளயுக்தி வருஷத்தில் (1798. கி. பி.) இறந்துபோக அவர்மேல் கட்டப்பட்ட சமாதியில் இன்றைக்கும் பூஜை நடக்கிறது. இவருடைய சிஷ்யராகிய பிரமலையிலிருந்து வந்திருந்த வேளாளத் திருமேனி அருணாசலப் பரதேசி அந்த ஸ்தானத்தில் சாமியாராயிருந்து வருகிறார். அவருடைய விபூதியால் அவர் எல்லா வியாதிகளையும் சௌக்கியப்படுத்தக் கூடியவராயிருக்கிறார்.

மேற்சொன்ன மூன்று பரதேசிகளின் மொத்தகாலம் 84 வருஷம். கணேசருக்கும் சுப்பிரமணியருக்கும் அந்த இரண்டு சமாதிகளுக்கும் பூஜை இப்போதுங்கூட நடத்தப்பட்டு வருகின்றது. இந்தப் பரதேசிகளின் வருஷ தினங்களில் எல்லாப் பரதேசிகளுக்கும் சாப்பாடு போடப்படுவதுடன் அன்னம் தாராளமாகவும் கொடுக்கப்படுகின்றது. ஆனால் முன் கோயிலுக்குச் சொந்தமாயிருந்த நிலங்களில் பாதிதான் அதற்கு உபயோகப்பட்டுவருகிறது. ஏனெனின் ஹார்டிஸ் துரை காலத்தில் வரி கொடுக்கும் கஷ்டத்திற்காகப் பாதிதான் அதன் சொத்தென்று கிராமத்தார்கள் சொன்னார்கள். இதன் பிரயோஜனமாகக் கம்பெனியார் (ஈஸ்டு இந்தியா கம்பெனியார்) மறுபாதியை எடுத்துக்கொண்டார்கள். "இன்னும் அதிக பிரயாணிகளையும் பரதேசிகளையும் போஷிக்க மறுபாதியையும் திருப்பிக் கொடுக்கும்படியாகக் கம்பெனியாரைக் கேட்டுக்கொள்ளுகிறோம்." (இது கி. பி 1812-ம் வருஷத்தில் அந்தக் கோயில் பூஜை செய்தவரொருவரால் எழுதப்பட்டது.)

ஆர். பார்த்தசாரதி அய்யங்கார்,
கவர்ன்மெண்ட் பாடசாலை உபாத்தியாயர்,
முத்தியாலுப்பேட்டை, புதுவை.

---

# இலக்கியப் பகுதி.

## சீவக சிந்தாமணியும் அதன் வரலாறும்.

சீவக சிந்தாமணி தமிழிலுள்ள பழைய காப்பியம் ஐந்தனுள் முந்தியது. (மற்றவை: சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி என்பன.) இது பழைய இலக்கிய வுரைகளிலும் இலக்கண வுரைகளிலும் மேற்கோளாக எடுத்துக் காட்டப்பட்ட பிரமாண நூல்களுள் ஒன்று. முற்காலத்து முதல் இடை கடையென்னும் மூன்று சங்கத்தினுமிருந்து தமிழாராய்ந்த தெய்வப்புலவர்கள் திருவாய்மலர்ந்த இலக்கியங்கள் போன்று செந்தமிழ் நடையிற் சிறந்து விளங்குவது. வடமொழியில் வான்மீகம்போல எல்லா வருணனைகளும் தன்பாலமையப்பெற்றிருத்தலால் மகாகாவியமென்று வழுத்தப்படுவது.

இந்நூல் சீவகன் என்னும் ஓரரசன் பிறந்தது முதல் வீடுபெற்றது வரையுமுள்ள கதையைக்கூறும். இதில் மக்கள் ஆவசிகம் அறிய

வேண்டிய அரியபெரிய தர்மங்கள் பல வெள்ளிடை மலைபோல் விளங்கக்கிடக்கும்.

இந்நூல் முதலிற் கடவுள் வாழ்த்து முதலியனவும், கதையைத் தொகுத்துக் கூறுவதாகிய பதிகமும் முறையே யமையப்பெற்றுப் பின்னர், நாமக ளிலம்பகம், கோவிந்தையா ரிலம்பகம், காந்தருவதத்தையா ரிலம்பகம், குணமாலையா ரிலம்பகம், பதுமையா ரிலம்பகம், கேமசரியா ரிலம்பகம், கனகமாலையா ரிலம்பகம், விமலையா ரிலம்பகம், சுரமஞ்சரியா ரிலம்பகம், மண்மக ளிலம்பகம், பூமக ளிலம்பகம், இலக்கணையா ரிலம்பகம், முத்தியிலம்பகம் எனப் பதின்மூன்று இலம்பகத் துறுப்பாகப் பகுக்கப்பட்டுள்ளது. இதன் செய்யுட்டொகை ௩௧௪௫. இதனை யியற்றியவர் திருத்தக்க தேவர் என்னும் சைனமுனிவர்.

சோழர் குலத்திலே அவதரித்த இத் திருத்தக்கதேவர் நல்லாசிரியர் பால் அகத்தியம் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களையும், பழைய சங்கச் செய்யுள்களையும், மற்றவற்றையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்து வடமொழியிலும் அங்ஙனமே வல்லுநராய், தாம் புகுந்துள்ள ஆருகத சமய நூல்களையும் செவ்வனே தெரிந்து, அன்பு முதலிய குணங்களமையப்பெற்று, ஆண்டில் இளையராயினும் அறிவில் முதியராய் இளமைப் பருவத்திலேயே துறவுபூண்டு, ஆசிரியரை விட்டு நீங்காதவராய், தம் ஆசிரியருடன் பாண்டி நாட்டிலுள்ள மதுரையம் பதியையடைந்து அவ்விடத்தே சிலகாலம் வதிவாராயினர்.

அக்காலத்து, சங்கப்பலகையேறித் தமிழாராய்ந்துகொண்டிருந்த தெய்வப்புலவர்கள் சிறப்பைக் கேட்டு அவர்களோடு பழக விரும்பி, தம் ஆசிரியரிடம் அநுமதிபெற்று அச்சங்கப் புலவர்களை யடைந்து அளவளாவி மகிழ்ந்து அவர்களால் நன்குமதிக்கப்பட்டிருந்தனர்.

அங்ஙன மிருக்கையில் ஒருநாள் சங்கப்புலவர்கள் திருத்தக்க தேவரை நோக்கி, "நும் சமயத்தாரிற் பாடும் புலவர் பலரும் துறவினை வலியுறுத்திப் பாடத் தெரிந்துகொண்டாரேயன்றி, காமச் சுவையைப் பாராட்டிப் பாடத் தெரிந்துகொண்டா ரல்லர். இக்காலத்து வழங்கும் காமச் சுவையையுடைய நூல்கள் பலவற்றுள்ளும் ஒன்றேனும் நும்மவர் இயற்றியதாகக் காணப்படாமையே அதற்குத் தக்க சான்றும்" என்று சொல்ல, அதற்குத் திருத்தக்க தேவர் "இன்பச் சுவையைப் பாராட்டுதலில் எம்மவர் வெறுப்புற்றிருந்தா ரல்லது பாடத் தெரியாதிருந்தா ரல்லர்" என்று கூற, சங்கப்புலவர்கள், "அப்படியானால் காமச்சுவை முழுதும் விளங்க அமைத்துத் தேவரே ஓர் நூல் இயற்றுதிர்" என்றார்.

322



உடனே திருத்தக்கதேவர் தம் ஆசிரியரிடம் நிகழ்ந்தவற்றைக் கூறி அவரதுமதியின்படி, சீவகன் கதையை ஒரு பெருங் காப்பியமாகப் பாடத் தொடங்கி எட்டுநாளில் அந்நூலை முடித்து, பாண்டியராசன் அவைக்களத்தில் சங்கப்புலவர்கள் முன்னர் அரங்கேற்றினர். அவர்கள் கேட்டு, இந்நூல் சொல்வளம், சந்தவின்பம், செய்யுணடை முதிர்ச்சி, காமச்சுவை முதலியவும் அலங்காரங்களு முடைத்தாய் எவ்வெச் சாதி யார்க்கும் காலம் இடம் முதலியவற்றிற்கு ஏற்ற வருணனை முதலியன பெற்றிருத்தலைத் தெரிந்து வியப்புற்று, "இங்ஙனம் பாடுதல் யாவர்க்கும் அரிதரிது" என்று புகழ்ந்து மிகப் பாராட்டிப் பெருமகிழ்ச்சியுற்றனர்.

அப்பொழுது, ஆங்குள்ளாரிற் சிலர் சந்தேகித்து, "இத்திருத்தக்க தேவர் இளமைப்பருவந் தொடங்கித் துறவுபூண்டிருத்தல் மெய்ம்மை யாயின், மற்றச் சுவைகள்போலக் காமச்சுவையை இவ்வாறு பாராட்டிப் பாடுதல் இவர்க்கு இயலுவதன்று; ஆதலின் இவர் சிற்றின்ப அனுபவ முடையராதல் வேண்டும்" என்று தம்முட் பேசிக்கொள்ள, அதனைத் தேவர் தெரிந்து அனைவருங் காணும்படி, திரண்ட இரும்பின் கட்டி யைத் தழலிற் பழுக்கக் காய்ச்சி "யான் பால் சந்நியாசியாக விருத்தல் மெய்ம்மையாயின், இஃது என்னைச் சுடாதொழிக" என்று சூளுரைத்து, அக்கட்டியைத் தங் கையினால் தழுவியும் நாவால் பரிசித்தும் தாம் யாதொரு துன்பமுமடையாது இன்புற்றிருந்தனர். அது கண்டவர்கள் வியப்பும் பயமுங்கொண்டு தேவரை வணங்கி மகிழ்வித்தனர்.

இதனால் சீவக சிந்தாமணியின் பெருமையும் வரலாறும் நன்கு விளங்குகின்றதன்றோ?

இத்துணைப் பெருஞ் சிறப்பமைந்த சீவக சிந்தாமணியை, மாத மொருமுறை பிரசுரமாகும் இச்சிறு பத்திரிகையில் ஆதியோடந்தமாக வெளிப்படுத்த வேண்டுமேனால் அது அசாத்தியமாகும். ஆதலின் அந் நூலில் சுவை முதிர்ந்தொழுகும் காதைகள் சிற்சில பொறுக்கி, காலத் துக்கும் பத்திரிகை தருமிடத்திற்கும் தக்கவாறு, இடையிடையே அந் நூலின் செய்யுட்கள் சொல்வளனும் பொருட்பொலிவுங் காட்ட, உரை நடையாக எழுதவுன்னி, முதலில் நாமகளிலம்பகத்தை அடுத்த பத்திரி கைக்கு விடுத்தனன்.

பத்திராதிபர்.

# இலக்கணப் பகுதி.

## தொல்காப்பியம்.

நச்சினார்க்கினியம்.

### பொருளதிகாரம்.

மரபியல்.

எ. பறழெனப் படினு முறழாண் டில்லை.

இ-ள். மேற்கூறிய நான்கும் பறழெனவும்படும் எ-று. இவை இக்காலத்து வீழ்ந்தன. மற்று முற்கூறிய நான்கினையும் இப்பெயரானே முற்கூறாக, முதற் சூத்திரத்துள் ஓதிய முறைமைக் கேற்பவெனின், அற்றன்று அவற்றுக்கு இப்பெயர் சிறுபான்மை யென்பான் பிற்கூறினு னென்பது. உறழாண் டில்லையென்ற மிகையானே "கைம்மை யுய்யாக் காமர் மந்திக் - கல்லா வன்பறழ்க் கிளைமுதற் சேர்த்தி" யென்பதுங் கொள்க.

அ. நாயே பன்றி புலிமுய னான்கு
மாயுங் காலைக் குருளை யென்ப.

இ-ள். நாயும் பன்றியும் புலியும் முயலும் என நான்கும் குருளை யென்று சொல்லப்படும் எ-று.

"திறவாக் கண்ண சாய்செவிக் குருளை"
"விழியாக் குருளை மென்முலை சுவைப்பக்
குழிவயிற் றுஞ்சுங் குறுந்தாட் பன்றி"
"இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை"
"குருளை கோட்பட லஞ்சிக் குறுமுயல்
வலையிற் றப்பாது மன்னுயி ரமைப்ப"

என வரும். ஆயுங்காலை யென்றதனால் "சிறுவெள் ளரவி னவ்வரிக் குருளை" என்பதுங் கொள்க.

கூ. நரியு மற்றே நாடினர் கொளினே.

இ-ள். நரியுங் குருளை யெனப்படும். "பிணந்தின் பெண்டிர்க் குக் குருளை காட்டிப் - புறங்காட்டோரி புலவுத் தசைபெறூஉம்" என வரும். நாடினர் கொளினே என்றதனானே "வெயிலாடு முசுவின் குருளை யுருட்டுங் - குன்ற நாடன் கேண்மை" என்றாற்போல முசுவிற்குங் குருளைப் பெயர் கொடுக்க.

க0. குட்டியும் பறழுங் கூற்றவண் வரையார்.

இ-ள். மேற்கூறிய ஐந்தினையும் குட்டியென்றும் பறழென்றும் கூறுதல் வரையார் எ-று. அவை நாய்க்குட்டி பன்றிக்குட்டி புலிக்குட்டி முயற்குட்டி நரிக்குட்டி என வழக்கினுள் வந்தன.

"பாகிப் பரப்பிற் பறழொடு வதிந்த"
"வயநா யெறிந்த வன்பறழ் தழீஇ"
"புலிப்பற ழன்ன பூஞ்சினை வேங்கை"
"பதவுமெயல் பற்றி முயற்பற ழோம்புஞ்
சீறூ ரோனே நன்னுதல்"
"நரிப்பற ழகவா நாய்முலை சுரக்கும்"

என முறையானே வந்தன. நாயெனச் செந்நாய் நீர்நாய் முதலாயினவும் அடங்குமென்பது. மூவரி யணிலென்றவழிச் சொல்லப்பட்டவாறும் உய்த்துணர்க. பிறவும் அன்ன.

இலக்கணக்குட்டி.

---

# சாத்திரப் பகுதி.

## மங்கலம்.

( தொடர்ச்சி. )

இதன்கருத் திதுவாம்:— உயர்வு தாழ்வு என்னும் இரண்டும் உபாதியாற் கற்பிக்கப்பெற்றனவாம். உண்மையாயோ யாவரிடத்தேயும் ஆன்மா ஒருருவமாயே ஒளிர்கின்றமையின் அவ்வேகான்மதையை அறிவறிந் தமர்ந்த ஜீவன் முக்தர் அனுபவிப்பர். அதுவே சமத்தன்மையெனவும் சகமெனவும் புகலப்பெறும். அச்சமதையும் மனம் மோகத்தேரோறிருக்குங்கால் அனவரதம் அனுபவிக்கக் கிடைக்கும். இச்சரீரத்தின்கண்ணே யிருப்பதாயினும் மோகத் தேரேறும் மனத்தால் விழுங்கப்பெறுகின்றமையின்; அசாரமாய ஆகமாத்திரத்தே ஆன்மாவென்னுஞ் சிந்தையானது சேடிக்குமென்க.

சித்தவிருத்தியானது தவைத வடிவ விடய ஆசையின் கற்பனை வடிவ சயனத்தே துயின்றிருப்பதுபோன் றிருத்தலின், ஆன்ம ஞானவுதய வேதுவாய நன்னூலும் நல்லாசிரியரின் நல்லுபதேசமும் இல்லாமல் கேவலம் தனது புத்தி மாத்திரத்தானே ஆற்றப்பெற்ற அளவறும் விசாரத்தானும் விழிப்புறுவ தருமைத்தேயாம். விழிப்புருக் காரணத்தானேயாம் தபித்திடுகின்றேம்.

வேடன் வலையாற் பறவையைப் பந்திப்பதேபோலும், யானென தென்னும் மயலாற்பிரமான கிரந்திகளுற்ற போக விழைவென்னும் வலையி லகப்பட்டுள்ள நாம் மனத்தாற் பந்திக்கப்பட்டிருக்கின்றேம்.

அனலான் உலர்ந்த சருகைப் பொடிப்படுத்துவிப்பதேபோல, கோபத்தூம மீக்கிளம்பிச் சிந்தையாஞ் சுவாலையாற் சூழப்பெற்ற அனற் கொப்பாய மனத்தான் யாம் தாகமுறுகின்றேம்.

அவாவன்ன உதர பூரணமுறாத பெண் ஞமலியைப் பின்பற்றும் கொரோமான ஆண் ஞமலியாற் பிணம் உணப்படுவதேபோல அஞ்ஞான முற்ற யாம் ஆசை மலைவியின் பின்செல்லும் கொரோமான மனத்தா லயிலப்படுகின்றோம்.

ஆற்றங்கரையருகே நிற்கும் தருவானது பிரவாகத்தால் அரிப் பிழுப்புண்பதேபோலத் தரங்கங்களென்னச் சஞ்சலமாயும், அகப்படா விடயத்தே அடிபட்டு மோகிக்கும் அவலச் செய்கையை மேற்கொண்ட தாயும், சடமாயும் இடர்மயமாயும் இராநின்ற மனத்தினுற் றள்ளப்பட் டிழுத்தடித்துக்கொண்டுபோகப்படுகின்றோம்.

திருணமானது பெருங்காற்றினுற் சுற்றப்படுவதேபோலத் துறக்க முதலியவற்றினின்றும் அகாலத்தே வீழ்தற்காகவாவது, இவ்வுலகத்தின் கண்ணே இன்பஞ் சிறிதுமற்ற கீடம் பறவை முதலான துச்சமாய பிறவி களை எடுத்தற்காகவாவது, மனத்தானே அதிதூரஞ் சுழல்வுறப்படுகின் றேம்.

அற்ப நதியின் பிரவாகமானது அணையினுற் றகையப்படலே போல இச் சம்சாரமாகிய சிந்துவினின்றும் வெளிச்செல்ல முயன்று கொண்டிருக்கும் நாம் ஈனமனத்தாற் றகையப்படுகின்றோம்.

பாலகன் கழுதா (பேயா)ல் பீடிக்கப்படுவதேபோல மித்தை வடிவதாய், ஆராயின் காலத்திரயத்தினும் இல்லாததாய், நிகழும் துட்ட மனத்தாற் பீடிக்கப்பட்டிருக்கின்றோம்.

பாலகனைப் பயமுறுத்த நிமித்தங் கற்பிக்கப்பட்ட பேயானது அவனதறியாமையான் இருப்பையடைந்து, அப்பாலிய நீங்கியபோது அவனிடத்தே சுயமாய் ஆராய்வினுல் இருப்பின்மையை யடைவதொப்ப அஞ்ஞானியின் மதியால் வெற்றி கோடற்கொண்ணுத மனமே விவேக முண்டாங்கால் வடிவமே யின்றியதாகுமென்பது கருத்தாம்.

( இன்னும் வரும். )

வீர. சு.

## நியாயமாலா.

(முன் தொடர்ச்சி.)

47. பாததாடன நியாயம்: — பாதம் – கால், தாடனம் – அடித்தல், நியாயம் – திருஷ்டாந்தம். இது துக்க காரணமும் சுக காரணமாய்த் தோன்ற லிதுபோலவென்கின்றது. அதாவது: நெடுந்தூரம் வழிநடந்து சிரமத்தையடைந்த ஒருவனுடைய பாதங்களில் மற்றொருவனால் செய்யப்படாநின்ற தாடனாதிகள் (துக்க காரணமான அடித்தல், குத்துதல் முதலியன) சுக காரணமாய்த் தோன்றல்போல வென்பதாம்.

48. குளஜிஹ்வா நியாயம்: — குளம்–வெல்லம், ஜிஹ்வா – நாக்கு, (இரசனேந்திரியம்) நியாயம்–திருஷ்டாந்தம். இது ஜீவர்களுக்கு நன்மை பயக்கும் சற்கருமங்களில், அவர்களுக்கு விருப்பமான பயனைக்காட்டி அவர்களைப் பிரவர்த்திப்பித்த லிதுபோல வென்கின்றது. அதாவது: சிறுவர்களுக்கு ஆரோக்கியத்தைத்தருகின்ற ஔஷதங்களை வெல்லத்தில் வைத்து உண்பித்தல்போல வென்பதாம்.

49. உஷ்டிர லகுடிகா நியாயம்: — உஷ்டிரம் – ஒட்டை, லகுடிகா – தடி, நியாயம் – திருஷ்டாந்தம். இது யதார்த்த நிச்சயத்தில் கேட்டலாகிய அசத்து வினைச்செய்பவனைக் கேட்டலில் கேட்டலாகிய அசத்துத்தரத்தால் தெளிவித்தலிதுபோலவென்கிறது. அதாவது: ஒட்டை மதங்கொண்டபோது அதன்மேலேற்றப்பட்ட தடியினால் (விறகினால்) அதன் மதத்தைப் போக்குதல்போல வென்பதாம்.

50. மார்ஜ்ஜால விரத நியாயம்: — மார்ஜ்ஜாலம் – பூனை, விரதம் – தபசு, நியாயம் – திருஷ்டாந்தம். இது சாது ஜனங்களை வஞ்சிக்கும்பொருட்டுத் துஷ்டர்கள் அனுஷ்டிக்கின்ற விரதாநுஷ்டானங்களிதுபோலவென்கின்றது. அதாவது: ஒரு பூனையானது ஒரு மரத்தடியில் கண்ணை மூடிக்கொண்டு தவம் செய்வதுபோ லுட்கார்ந்துகொண்டிருந்தமையைக் கண்ட கபடமற்ற இரண்டு குருவிகள் அப்பூனையைச் சற்குணமுடையதெனவும் தர்ம சூக்ஷ்மந் தெரிந்ததெனவும் நம்பித் தங்கள் வழக்கைத் தீர்த்துக்கொள்ளும்பொருட்டு அதன் அருகிற்சென்று அதன் கூரிய நகங்களால் தம் இனிய உயிரை யிழந்தமைபோல வென்பதாம்.

51. ஜல தும்பிகா நியாயம்: — ஜலம் – தண்ணீர், தும்பி–சுரை, நியாயம்–திருஷ்டாந்தம். இது நல்லோ ரிணக்கமுள்ளவரையில் அடங்கியிருந்த தீயகுணமானது, நல்லிணக்கம் நீங்கியபோது வெளிப்பட்டுவிடுத லிதுபோலவென்கின்றது. அதாவது: கையினால் அமிழ்த்தப்பட்டுள்ள

327



வரையில் ஜலத்தில் மூழ்கியிருந்த சுரைக்குடுக்கையானது "அமிழ்த்துதல்" என்னும் கிரியா விசேஷம் நீங்கியபோது வெளிக் கிளம்பிவிடுதல் போலவென்பதாம்.

52. சிருங்க கிராகிகா நியாயம்: — சிருங்கம் – கொம்பு, கிராகிகா – பிடித்தல், நியாயம்–திருஷ்டாந்தம். இது ஒரு வஸ்துவின் இலட்சணத்தைத் தெரிந்து அதன்படி பரீக்ஷித்துத் தெரிந்துகொள்ளமாட்டாத ஒரு அஞ்ஞனுக்கு, அவ் வஸ்து ஞானமுடைய புருஷன் அவ் வஸ்துவினை நேரே குறித்துக்காட்ட லிதுபோலவென்கின்றது. அதாவது: தன் பசுவை அதன் லக்ஷணத்தைக்கொண்டு பரீக்ஷித்து இதுதான் நம் பசுவென அறிந்துகொள்ளமாட்டாத தனிகனுக்கு அப்பசுவினை யுணர்ந்த கோபாலன் (பசு மேய்ப்போன்) அதன்கொம்பைப் பிடித்துக் காட்டல் போலவென்பதாம்.

53. கிராம கௌலேயக நியாயம்: — கிராமம் – சிற்றூர், கௌலேயகம் – நாய், நியாயம் – திருஷ்டாந்தம். இது யாதொரு பயனுமின்றி அங்குமிங்குந் திரிபவர் செய்தி இதுபோலவென்கின்றது. அதாவது: கிராம நாயானது ஒரு பயனுமின்றியே அங்கு உழல்வதுபோலவென்பதாம்.

54. அந்தஸ்ஸூர்ய மகோதித நியாயம்: — அந்த: – குருடன், ஸூர்ய மகோதிதம் – சூரியமூர்த்தியின் மகத்தான உதயம், நியாயம் – திருஷ்டாந்தம். இது மகத் பிரகாச ரூப சிவம் அஞ்ஞானிகட்கு விளங்காமை யிதுபோலவென்கின்றது. அதாவது: மகத்தான சூர்யோதயமானது குருடனுக்கு விளங்காததுபோலவென்பதாம்.

( இன்னும் வரும். )

அநந்தபத்மநாபஸ்வாமி
காஞ்சீபுரம்.

---

## சுகுணமஞ்சரி.

### இரு பெருங்காற்று.

பெருங்காற்று உலகி லிருவகை. ஒன்று புறத்தது. மற்றையவொன்றோ அகத்ததாம். புறக்காற்று பிரசித்த வாயுவாம். இது ஸ்தூல சரீரங்களைச் சலிக்கச்செய்யுமாயினும் சூக்ஷ்ம சரீரங்களைச் சலிக்கச்செய்யும் ஆற்ற லிதற்கில்லை. ஸ்தூலத்தை அசைப்பது சூக்ஷ்மத்தை அசைக்காதென்பது ஆச்சரியமாகத் தோன்றும். சூக்ஷ்மமென்பதற்குச் சிறிய

தெனப் பொருள்கொண்டால் அது ஆச்சரியத்திற் கிடந்தான். அறிதற் கரியதெனப் பொருள்கொண்டா லாச்சரியப்படுதற் கிடமிராது.

சூக்ஷ்ம சரீரமென்பது பூத தன்மாத்திரைகளின் காரியவிசேஷம். அதனைப் புறவாயு வசைக்கமாட்டாது. அகத்ததான வாயுவோ சூக்ஷ்ம சரீரத்தையு மசைக்கும்; தூலத்தையு மசையச்செய்யும்; தேவர் முதலிய யாவரையு மசைக்கும். அது எதுவெனில், ஆசையேயாம். இதனைக் காற்றென உருவகப்படுத்திய தெதனாலெனின், ஸ்தூல, சூக்ஷ்ம சரீராதி யெவற்றையும் சலிக்கச்செய்யுந் தன்மையாலென்க. “ஆசையெனும் பெருங்காற்றூல் இலவம்பஞ்செனவு மனதலையும்” என்றூர் தாயுமானூர்.

இவ்வாசையானது வெகு திடதரமான வசிஷ்டாதி மகரிஷிகளின் இதயங்களையும் சலிக்கச்செய்ததென்பதைப் புராணேதிகாசாதிகளால் கேட்டுள்ளேம். யாம் வெகு பலசாலிகளெனக் கல்லையும் துரும்பெனப் புரட்டும் அநேகம் பேரை, இப்போதும் இவ்வாசையெனும் பெருங் காற்றுப் புரட்டிப் புரட்டி யடிப்பதை நாம் கண்கூடாகக் காண்கின்றூே மன்றூே! புறக்காற்றை வாயு ஸ்தம்பன வித்தையூல் சலியாவண்ணம் நிறுத்தவல்லோமெனப் பெருமைபேசும் சித்தர்களும் ஆசையெனும் பெருங்காற்றூல் அலைக்கப்பட்டோரே யாவர்.

இவ்வகக் காற்றை நிறுத்துதற்கு ஒரே சாதனமுளது. அதுவே மோக்ஷத்திற்கும் சாதனமாம். அதனைத்தான் சற்குருவாயிலாய்ப் பெற வேண்டியிருக்கின்றது. அஃதியாது? சிவஞானமாம். சிவஞானத்தை நாம் பெறவேண்டுமானூல் ஈசுவரகிருபை, குருகிருபை, வேதகிருபை, அந்தக்கரணகிருபை இவைகள் அத்தியாவசிகமாம். ஈசுவரகிருபை யில்லாவிடின் சற்குருசற்சாத்திராதி உத்தம சாதனங்கள் கிட்டா. அந்த ஈஸ்வரகிருபையானது பலேச்சையின்றிச் செய்யும் சதுபாசனை யொன்றி னூலேயே சித்தியாம் “முத்தி வேண்டுமேல், பத்தி வேண்டுமால், சத்தியம்இது, புத்தி நெஞ்சமே” என்ற பெரியார் வாக்கியமிதனையே விளக்குகின்றது. குருகிருபையில்லாவிடின் சீடன் நல்லுபதேசத்தைப் பெறமாட்டான். அக்குரு கிருபையானது ஆத்தம், அங்கம் முதலிய உத்தம சிசுரூஷையால் பெறப்படும். “குருபதேசேன விநாகல்பகோடி சதைரபி பிரம்ஹஜ்ஞானம் நஜாயதே” என்றது சுருதி. வேதக்கிருபையால் சிரவணஞ்செய்த அர்த்ததாரண சக்தி யுண்டாகும். இவ்வேதக் கிருபை யானது அதனை யடிக்கடி படனஞ்செய்தலால் சாதிக்கப்படும். அந்தக் கரணகிருபையால் ஞான சாமக்கிரிகள் சேகரமாம். இவ் வந்தக்கரண கிருபையானது அதன்கண்ணுள்ள மல, விக்ஷேபங்களை நிஷ்காம கர்மோ

பாசனைகளால் போக்குதலால் பெறப்படும். இங்ஙனம் ஈசுவரகிருபையாதி நான்கினையும் கொண்டு பெறப்படும் சிவஞான மொன்றினாலேயே ஆசையெனும் பெருங்காற்றால் அலைக்கப்படாமல் சிவாநந்தப் பெருவாழ்வில் திளைக்கலாகும். சுபம்.

இதோபதேசி.

---

## வைத்தியக் குறிப்பு.

பிரமேகம்: — நீர்க்கடுப்பு, நீர்த்தாரையில் வெள்ளை வீழ்தல், இரத்தம் வீழ்தல் முதலியவைகளால் அவஸ்தைப்படும் ஒவ்வொருவரும் நீலப்பூ பூக்கும் துத்திச்செடி வேர்ப்பட்டையை உரித்து எலுமிச்சங்காய்ப் பிரமாணம் தண்ணீர்விட்டு மைபோலரைத்து கால்படி எருமைத் தயிரில் கலக்கி 6 நாள் வரை அதிகாலையிற் சாப்பிட்டுவர நோயகன்று சுகத்தைக் கொடுக்கும். இதில் அரைக்கால் ரூபாயெடை பவள பற்பம், சிங்கி பற்பம், கர்ப்பூர சலாசத்து பற்பம் இம்மூன்றுஞ் சேர்த்து அருந்தினால் மிகுந்த குணமுண்டு.

வேறுவிதம்: — ஓர் இளநீரைப் பொத்து அதில் ஒரு சிரங்கை இஸ்கோல் விதையாவது, அல்லது திருநீற்றுப்பச்சை விதையாவது போட்டு இராமுழுதும் பனி வாடையில் ஊறவைத்திருந்து அதிற் கொஞ்சம் சீரகத்தையும் பனங்கற்கண்டையும் பொடித்துப்போட்டுக் கலக்கி 6 நாள் அல்லது 12 நாள் சாப்பிட்டுவரச் சுகந்தரும்.

பின்னுமொருவிதம்:—மிளகாய் சேர்க்கப்படாமல் மிளகு, சீரகம், காகப்பில் சேர்ந்த இளங்காரத்துடன் வெந்தயம் ஈரவெங்காயத்தைக் குழம்புவைத்து வாரத்துக் கிருமுறை சேர்த்துக்கொண்டுவர நாளடைவில் நோய்தீரும்.

இருமல்: — உஷ்ணக் கொதிப்பினால் உண்டாகிய புகைந்த இருமலையுடைய ஒவ்வொருவருங் காலை மாலை 6 வேளை செம்முள்ளியிலையிற் கொஞ்சம் மிளகும் அதிற்பாதி சித்தரத்தையும் வைத்து நன்றாயரைத்து கழற்சிக்காய்ப் பிரமாணஞ் சாப்பிட்டுவரத் தீரும்.

V. மௌனகுரு ருத்திரமூர்த்தி ஆச்சாரியார்,
லே. முனிசிபல் கௌன்சிலர்
பழநிஸ்தலம்.

---

# சமாசாரம்.

## புதுவையில் ஓர் புதிய மோட்டார் பாரவண்டி.

மணிலாக்கொட்டை மூட்டைகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுபோவதற்காக இவ்வூரில் மோட்டார் சக்தியால் ஓடும் ஓர் பாரவண்டி புதிதாக வரவழைத்திருக்கிறார்கள். இவ்வண்டியில் ஓர் முறைக்குச் சுமார் 50 முதல் 70 மணிலா மூட்டைகள் வரையில் ஏற்றலாம்.

## இந்திய ஸ்திரீ சாண்டோ.

இந்திய ஸ்திரீ சாண்டோ என்றழைக்கப்பெறும் அபார தேகபலம் வாய்ந்த மிஸ் தாரா என்ற மாது சென்னைக்கு வந்திருக்கிறார். இந்த அம்மாளுக்கு வயது இருபத்துமூன்றாம். இவர் சென்னையிற் செய்த அதிசயிக்கத்தக்க செயல்களிற் சில இவையாகும்.: மனிதர்கள் ஏறிய ஓர் பாரவண்டியைத் தன் கூந்தலால் இழுத்ததுமன்றி 250 ராத்தல் நிறையுள்ள ஓர் கல்லை அக்கூந்தலிற் கட்டித் தூக்கினர். அவரது தலையும் தோள்களும் ஓர் நாற்காலியிலிருக்க, பாதங்கள் மற்றோர் நாற்காலியிலிருக்க, முதுகு ஓர் ஈட்டி முனையின்மீதிருக்க 450 ராத்தல் நிறையுள்ள ஓர் கல் அவர் மார்பின்மீது வைக்கப்பட்டுச் சம்மட்டிகளால் அடித்து உடைக்கப்பட்டது. மிஸ் தாரா ஓர் வில்லைப்போல் வளைந்து நிற்க அவர் தோள்களின்மீது ஓர் மனிதன் ஏறிநிற்க முழந்தாளின்மீது ஓர் பெரிய மரக்கட்டையைத் தாங்கினர். அவர் தரைமீது படுத்துக்கொள்ள மார்பில் 900 ராத்தல் நிறையுள்ள ஓர் கல் சம்மட்டிகளால் உடைக்கப்பட்டது. ஓர் மனிதனைத் தன் பாதங்களால் தூக்கினர். ஐந்து ஈட்டி முனைகளில் தம் தேகம் பதிய ஓர் பாயிற் படுப்பதுபோல் சயனித்தார். ஓர் ஈட்டி முனை தன் நெற்றிக்கு நேராக வைத்துக்கொண்டு அந்த ஈட்டியால் ஓர் வண்டியைத் தள்ளினர். இவ்வளவு அற்புத சக்திகள் வாய்ந்த பெண்மணியை ஈன்ற இந்தியாவின் பெருமையே பெருமை!

## ஓர் விபத்து.

சென்ற மாதம் 30-ம் தேதி புதுவைத் துறைமுகத்தில் ஓர் படகு மணிலாமூட்டைகளைக் கப்பலில் ஏற்றிவிட்டுத் திரும்பும்போது கவிழ்ந்துவிட்டது. படகிலிருந்த ஆறுபேர்களும் ஜலத்தில் வீழ்ந்தனர். உடனே

கப்பலிலிருந்து சில மரக்கட்டைகள் எறியப்பட்டன. அக்கட்டைகளின் உதவியினாலும் வீர நெஞ்சமுள்ள மற்றோர் படகுக்காரனது புகழத்தக்க உதவியினாலும் மூன்று பேர்கள் கரைக்குக் கொண்டுவரப்பட்டு ஆஸ்பத்ரிக்கு அனுப்பப்பட அவர்களில் ஒருவன் இறந்துவிட்டான். கடலிலிருந்து எடுக்கப்படாத இறந்த மூவருடைய பிரேதங்களும் அகப்படவில்லை.

---

### மதுபானத்தின் தீங்கு.

ஜெர்மனி தேசத்திலுள்ள ஊர்ஸ்டன் பெல்ட் என்னுமிடத்தில் ஒருவன் குடிவெறியில் துப்பாக்கியால் தன் மனைவி, மாமன், மைத்துனன், மைத்துனி இவர்களை அபாயகரமாகச் சுட்டுக் காயப்படுத்திவிட்டுத் தானுந் தற்கொலை செய்துகொண்டான்.

---

### அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாம்.

16 வயதுள்ள பெண் தன் ஜ்வரம் நீங்கும்பொருட்டு 15 நிமிஷத்தில் 30 க்ரெயின் கொயினாவை உட்கொண்டாள். இரண்டுமணி நேரத்திற்குப் பிறகு அவளுக்குச் சகிக்கவொண்ணாத தலைநோயும் காதிரைச்சலும் உண்டாயினவாம். மறுநாள் காலை அவள் செவிகளிரண்டும் செவிடாயினவாம்.

---

### நடன நாய்.

சேலம் ஜில்லா ஓமலூர் வெங்கட்டராமையர் பலகாரக் கடையிலிருக்கும் ஓர் நாய் மனிதரைப்போல் பின்னிரண்டு கால்களை ஊன்றியும் முன்னிரண்டு கால்களைத் தூக்கியும் சமயோசிதமாகத் தலை அசைத்துக் கண்சிமிட்டி வாலை அசைத்துச் சுழன்று நடனஞ்செய்கிறதாகவும் ஓர் நிருபர் "லோகோபகாரி" பத்திரிகைக்கு எழுதுகிறார்.

---

### சென்னையில் ஆகாய விமானம்.

மிஸ்டர் மேட்லீ என்ற, சென்னை கார்பரேஷன் ஸ்பெஷல் என்ஜினீர் இம்மாதம் 8-ம் தேதி காலை 6 மணிக்குச் சென்னையைச்சார்ந்த சைதாப்பேட்டையிலிருந்து ஆகாய விமானத்தில் சுமார் 700 அடி உயரத்தில் எழுந்து சென்னையிற் பலவிடங்கள் வழியாகப் பறந்துசென்று தாம் புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வந்திறங்கினார். சுமார் 25 நிமிஷ நேரத்தில் 25 மைல் தூரம் அவர் பறந்து சென்றதாகக் கணக்கிடப்பட்டது.

---

### நாகப்பட்டனத்தில் பிளேக்.

நாகப்பட்டணத்தில் பிளேக் வியாதி பரவியிருக்கிறதாகச் சமாசாரம் எட்டுகிறது. இக்கொடிய வியாதி அதிகமாய்ப் பரவுதலைத் தடுப்பதற்கு வேண்டிய முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

---

### செயற்கைப் பால்.

ஜெர்மனி தேசத்திலுள்ள பிராங் போர்ட என்னும் நகரத்தில் பசுவின் பாலினும் அதிக உருசியுடையதும் குணமுடையதுமாகிய ஓர்வித செயற்கைப் பால் செய்யும் முறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்.

---

### ஓர் நவீன நாய்.

ஜெர்மனி தேசத்தில் ஓர் கனவான் வாசிக்கவும், எழுதவும், எழுத்துக்கூட்டவும் சக்தியுடைய ஓர் நாய் வைத்திருக்கின்றனராம்.

---

### இந்தியாவின் ஜனத்தோகை.

1911-ம் ஆு எடுத்த கணக்கின் பிரகாரம் இந்தியாவின் ஜனத்தொகை, புருஷர்களில் 161338935-ம் ஸ்திரீகளில் 153817461-ம் ஆக மொத்தம் 315156396.

---

### பேராசை பெருநஷ்டம்.

மேலச்சேவலேயடுத்த மணிமுக்தார் குளத்து வாசியாகிய இசக்கிமுத்து நாடார் வீட்டில் ஓர்நாளிரவு ஐந்துபேர்கள் வந்து தாங்கள் நாடாரின் மனைவியின் ஜனன ஸ்தலமாகிய காடான் குளத்து வாசிகளென்றும் ஓர் வியாஜ்ய விஷயமாக வந்ததாகவுங் கூறி இரவு நாடார் வீட்டில் தங்கியிருந்து மறுநாள் காலை சேரமாதேவி என்ற ஊருக்குப்போய் மாலையில் நாடார் வீட்டுக்குத் திரும்பி அவரைக் கண்டு தங்களிடத்தில் ஒரு தங்கக்கட்டி யிருப்பதாகவும் அதைச் சற்று ரகஸ்யமாய் விற்க விரும்புவதாகவும் நாடாருக்கு வேண்டுமானால் சொற்ப விலைக்குத் தருவதாகவும் சொல்ல நாடார் தன் மனைவி மருமகள் ஆபரணங்களனைத்தையும் கழற்றி அவர்களுக்குக் கொடுத்ததுமன்றி ரொக்கமாக 250 ரூபாயும் கொடுத்து தானுந் தன் மகனுமாக அவர்களோடு 7 மைல் தூரஞ்சென்று அவர்களை அனுப்பிவிட்டு வீட்டுக்குத் திரும்பிவந்து தங்கக்கட்டியைப்பார்த்தபோது அது பித்தளைக்கட்டியா யிருப்பதாக அறிந்தாராம். அப்பொழுது அவர் குடும்பத்துடன் அடைந்த துயரம் யாவரும் எளிதில் ஊகித்தறிந்துகொள்ளக் கூடியதே.